# கணிதம்

## வகுப்பு - I

## பகுதி - 2

Mathematics
Standard I
Part - 2
Tamil Medium

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT),
கேரளம்
2014

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# கணிதம்

பகுதி 2

*Prepared by* State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala.
*Website* www.scert.kerala.gov.in *e-mail* scertkerala@gmail.com

*Typeset and design by* SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education • 2014

அன்புள்ள குழந்தைகளே,

கற்கண்டாக இனிக்கும் வண்ணம் இக்கணிதப் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள பெரும்பாலான செயல்பாடுகளும் ஆசிரியரின் உதவியோடு செய்ய வேண்டியவைகளாகும். சுற்றுப்புறத்திலிருந்து கிடைக்கும் அனுபவங்கள் வாயிலாக பெறவேண்டிய கணிதக் கருத்துக்கள் இப்பாடநூலில் மலர்மாலையாக பின்னப் பட்டுள்ளது.

விளையாடியும், உற்றுநோக்கியும், பரிசோதித்தும் அக்கணிதக்கருத்துக்கள் உருவாக வாய்ப்பளிக்க வேண்டும்.

வாழ்த்துக்களுடன்....

**முனைவர்.கே.ஏ.ஹாசிம்**

இயக்குனர்

மாநில கல்வியாராச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

கேரளம்

## Text book Committee

**Ajeeshkumar.T.B**
HSA, GHS, Mannamkandam. Idukki.

**Karmali.P.A**
LPSA, HFAS BS, Kumbala.

**P.P.Prabakaran Nair**
HSA (Rtd), Palora High School, Kozhikode.

**Bareesh.V.P**
AMLPS, Farook, Kozhikod.

**Manoj. T.N**
HSA, GMHS, Palakuzha. Eranakulam

**K.R. Muraleedharan Pillai**
Senior Lect., DIET, Kollam.

**Muhammed Abdulla.K.M**
Govt Boys HSS, Manjeri. Malappuram.

**Sasidharan.V.P**
PD Teacher, GHSS, Ravaneshwaram. Kasarkod.

**Sree kumar.C.G**
PD Teacher, Govt.Co-operative LPS, Irumpanangad. Kollam.

**C.V. Sajeevan**
Kariyil ALPS, Thuruthi, Kasarkod.

**Habeeb Rahman**
HSA, GHS, Irumpuzhi. Malappuram.

### Experts

**Venugopal.C**
Asst.Professor, Govt College of Teacher Education, Thiruvananthapuram.

**Dr. Sunny Lukose**
Deputy Director of Collegiat Education(Rtd), Ernakulam.

### Artist

**Aseesh.K.S**
DEO Office, Muvattupuzha.

**Kunjuraman.PC**
DIET, Ernakulam.

**Jijeesh.P.B**
RDTE, Kothamangalam.

**Rakesh**
Neyyar Dam, Thiruvananthapuram.

**Harikumar.K.B**
Kazhakoottam, Thiruvananthapuram.

**Hari charutha**
Nemom, Thiruvananthapuram.

### Tamil Version

**Babu.S**
PD Teacher, GLPS, Devikulam. Idukki.

**Dr. M.Nainar**
Professor (Rtd), University College, Thiruvananthapuram.

**Robert Xavier.M.**
Headmaster, ALPS, Attampathy. Palakad.

### Academic Co-ordinator

**Dr. Sahaya Dhas D, Research Officer, SCERT.**

State Council Of Education Reasearch and Training (SCERT)
Vidhya Bhavan, Poojapura. Thiruvananthapuram. 695012.





## உள்ளடக்கம்


6. பத்துகளும் நானும் ................. 78

7. கூட்டுவோம் கழிப்போம் ..... 94

8. வடிவங்களின் அழகு ............. 105

9. எவ்வளவு நீளம்? ............. 111

10. ரூபாயும் பைசாவும் ................. 119

11. நேரமாச்சு .................................... 125




# 6 பத்துகளும் நானும்

கதை கேட்போம்










காட்டிலுள்ள பிராணிகள் முயலைத் தலையில் தூக்கி ஆட்டம் போட்டன. மகிழ்ந்தன! விருந்து வைக்கத் தீர்மானித்தன! வேலைகளைப் பகிர்ந்துகொண்டன.

காய்கறிகள் கொண்டு வருவது யானையின் வேலை. அது முயலையும் அழைத்துக் கொண்டு காட்டை நோக்கி நடந்தது.





வழியில் ஒரு வாழைத் தோட்டம். அதில் வரிசை வரிசையாக வாழைகள்.



ஒரு வரிசையில் எத்தனை வாழைகள்?

☐ வாழைகள்


இரண்டு வரிசைகள் சேர்ந்தால் மொத்தம் எத்தனை வாழைகள்?



10 ம் 10 ம்

இருபது வாழைகள்

20 வாழைகள்



மூன்றாவது வரிசையில் எத்தனை வாழைகள்?

மூன்று வரிசைகளையும் சேர்த்தால் [ ]

20 ம் 10 ம் முப்பது வாழைகள் [30] வாழைகள்



இப்பொழுது வரிசைகள் எத்தனை? [ ]

நான்கு வரிசைகளையும் சேர்த்தால் மொத்தம் எத்தனை வாழைகள்?

[ ] ம் [ ] ம் நாற்பது வாழைகள் [40] வாழைகள்

மேலும் ஒரு வரிசை கூடச் சேர்ந்தால் ?

[ ] வாழைகள்


காய்கறித் தோட்டத்தைத் தேடித் தேடி அலைந்தன.







முயல் நண்பர்களை அழைத்தது. நண்பர்கள் வந்தனர். யானையாருக்குப் பழங்கள் கொண்டு வந்தனர்.



கூடையில் எத்தனை பழங்கள் உள்ளன? ☐

எல்லா நண்பர்களும் பழங்களைக் கொண்டு வந்தனர்.

அணில் எத்தனை பழங்கள் கொண்டு வந்தது? [ ]



பழங்கள் மொத்தம் எத்தனை?

50 ம் 10 ம் அறுபது பழங்கள்.



பழங்கள் [ 60 ]



10 பழங்களைக் கையிலேந்தி மானம்மா வந்தது.

இப்பொழுது மொத்தம் எத்தனை பழங்கள்?



பழங்கள் [ ]

60 ம் 10 ம் எழுபது பழங்கள்



ஆடு10 பழங்கள் கொண்டு வந்தது

இப்பொழுது மொத்தம் எத்தனை பழங்கள்?

70ம் [ ] ம் எண்பது பழங்கள்.



பழங்கள் [ ]

இறுதியில் ஆடியசைந்து ஆமையும்10 பழங்கள் கொண்டு வந்தது.



80 ம் ☐ ம் தொண்ணூறு பழங்கள்



பழங்கள் ☐



யானை பழங்களைத் தின்றது; துள்ளி எழுந்தது.

முயலும் யானையும் காய்கறித் தோட்டத்திற்குச் சென்றன.




நண்பர்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

எண்ணிக்கையைக் கண்டுபிடித்து எழுதுதல்
























**யாருடைய பட்டமிது?** நூலைப் பட்டத்துடன் இணையுங்கள்.


பட்டத்திலுள்ள பொட்டுகளின் எண்ணிக்கையே குழந்தைகளின் சட்டையிலுள்ள எண்.
பொட்டுகளை எண்ணுங்கள். அந்த எண்ணுள்ள சிறுவனின் நூலையும் பட்டத்தையும் இணையுங்கள்.




விடுபட்டவற்றை நிரப்புங்கள்


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | | 30 | | | 60 | | | 90 |


## கண்டுபிடிப்போம்














வரிசையில் பத்தாவதாக நிற்பது கீதா.
கீதாவைக் கண்டுபிடியுங்கள்.
பதினெட்டாவதாக நிற்பவன் மோகன்.
கடைசியிலிருந்து மோகன் எத்தனாவது பையன்?

## எண் எது?




அவர்கள் மஞ்சாடி முத்துகளைப் பத்துப் பத்தாகக் குழுக்களாக்கினர்.

| | | | எண் |
|---|---|---|---|
| தேவிகா |  | (10) (10) (10) (4) | 34 |
| சரண் |  | (10) (10) (6) | |
| பாத்திமா |  | (10) (10) (10) (10) (2) | |
| மேரி |  | (10) (10) (9) | |

யாருக்குக் கூடுதல் மஞ்சாடி முத்துகள் கிடைத்தன? ☐

அவர்களுக்குக் கிடைத்த மஞ்சாடி முத்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் பெரியது முதல் சிறியது வரை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

☐ ☐ ☐ ☐

## விடுபட்ட கட்டங்களை நிரப்புவோமா?

| + | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | 21 | | | | | | | |
| 2 | 12 | 22 | | | | | | | |
| 3 | 13 | 23 | | | | | | | |
| 4 | 14 | 24 | | | | | | | |
| 5 | 15 | 25 | | | | | | | |
| 6 | 16 | 26 | | | | | | | |
| 7 | 17 | 27 | | | | | | | |
| 8 | 18 | 28 | | | | | | | |
| 9 | 19 | 29 | | | | | | | |


38 ஐ விடப் பெரிய எண் எது? வட்டமிடுங்கள்.

27 35 24 42 18

71 ஐ விடச் சிறிய எண் எது? வட்டமிடுங்கள்.


96 84 53 80 99

## நண்பர்களுக்கு வரிசையாக எண் கொடுங்கள்





## ஒளிந்திருப்பது யார்?

**50** முதல் **78** வரையுள்ள புள்ளிகளை வரிசையாக இணைத்துப் பாருங்கள்.



## ஏணியும் பாம்பும்

வாருங்கள் ஏணியும் பாம்பும் விளையாடலாம்.



# 7 கூட்டுவோம் கழிப்போம்

அழகேசனும் அலமேலுவும் திருவிழா காணப் பெற்றோருடன் சென்றார்கள். ஆற்றங்கரை வழியே நடந்தார்கள். காலடிச் சுவடுகளைக் கண்டார்கள். அதோ... போகும் மாலதியின் கால் சுவடுகள்!





**நிரப்புங்கள்**

மாலதியின் வலது காலடிச் சுவடுகளிலுள்ள எண்கள் 1 3 5 ◯ ◯

இடது காலடிச் சுவடுகளிலுள்ள எண்கள் 2 4 6 ◯ ◯

# கிராம விழா





படிக்கட்டுகளின் எண்ணிக்கை வட்டத்திற்குள் தரப்பட்டுள்ளது. விடுபட்ட எண்களை நிரப்புங்கள்.

17– ஆவது படிக்கட்டிலிருந்தது சுண்டெலி. ஆட்களின் சத்தம் கேட்டவுடன் சுண்டெலி மேலே ஓடியது.

அது இப்படி ஓடியது . . .

17 19 21 23 ◯ ◯



சுண்டெலி ஓடுவதைப் பார்த்தது தவளை. 25– ஆவது படிக்கட்டிலிருந்த தவளையும் மேலே தாவியது.

அது இப்படித் தாவியது . . .

25 30 35 ◯ ◯





சரியான விடையை எழுதிப் பெட்டியில் போடவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 78 | 80 | 82 | | | |
| 40 | 50 | | | 80 | 90 |
| | | | 20 | 25 | 30 |

சரியான விடையை நீங்களும் எழுதிப் பாருங்கள்.


## திருவிழாக் காட்சிகள்!



அலமேலு இரண்டு ஆரஞ்சுப் பழங்கள் எடுத்தாள். கூடையில் மீதி எத்தனை?

$8 - 2 = \square$





2 பலூன்கள் எனக்கு. ஒன்று அக்காவிற்கு


$3 = \boxed{2} + \square$

1 பலூன் அழகேசனுக்கு 2 பலூன்கள் எனக்கு

$3 = 1 + \square$

பெட்டிக்கு வெளியே எத்தனை கப் ஐஸ் உள்ளது? ☐

பெட்டி நிறைய இனி எத்தனை கப் ஐஸ் தேவை? ☐




பெட்டி நிறைந்த பின் மீதி எத்தனை கப் ஐஸ் இருக்கும்?

9 - 7 = ☐



மாலதியின் இடது கையில் 8 வளையல்கள். மேசையின் மேல் 6 வளையல்கள். மொத்தம் எத்தனை வளையல்கள்?

☐ ம் ☐ ம் சேர்ந்தால்


☐ வளையல்கள்

இனி எத்தனை வளையல்கள் போட்டால் மாலதியின் கையில் 10 வளையல்கள் இருக்கும்? ☐

மாலதி 2 வளையல்கள் எடுத்தால் மேசையின் மேல் எத்தனை வளையல்கள் மீதியிருக்கும் ? ☐

மாலதியின் கையிலும் மேசையிலும் உள்ள வளையல்கள் சேர்ந்தால் மொத்தம் எத்தனை வளையல்கள்? ☐

திருவிழா பார்த்த பின் அவர்கள் மேரியின் வீட்டிற்குச் சென்றார்கள்.









## அடுக்கி வைக்கலாம்




கறுப்புப் பசுவின் பால் குப்பிகளை மேரியின் அம்மா தட்டில் அடுக்கி வைத்தார்கள். தட்டில் இனி எத்தனை பால் குப்பிகள் வைக்கலாம்? ☐

வெள்ளைப் பசுவின் எத்தனை பால் குப்பிகளை வைத்தால் தட்டில் 10 குப்பிகள் ஆகும்? ☐


தட்டு நிறைந்த பின் எத்தனை குப்பிகள் மீதி வரும்? ☐

மொத்தம் $10 + 2 = $ ☐

$7 + 5 = $ ☐

## அடைகாத்த கோழி

மேரி அவர்களை அடை காக்கும் கோழியின் அருகில் அழைத்துச் சென்றாள்.




பொரியாத முட்டைகள் எத்தனை? ☐

15 ஐ விட 20 எவ்வளவு கூடுதல்? ☐

## இளநீர் கணிதம்



கூடையில் எத்தனை இளநீர் உள்ளன? ☐

வெளியில் உள்ள இளநீர் எத்தனை? ☐

மொத்தம் எத்தனை இளநீர்?

8 + 3 = ☐

8 + 2 = ☐

10 + ☐ = ☐




## கணக்கிடலாம்



நாற்காலிகள் மொத்தம் எத்தனை? 8+9 = □

8 + □ = □

10 + □ = □



மெழுகுவர்த்திகள் எத்தனை?

5 + 8 = □

□ + □ = □

10 + □ = □


## மீதி எவ்வளவு?

படத்தைப் பாருங்கள்.

எத்தனை கம்புகளை மாற்றினான்? □

மீதி எத்தனை? □

10 – □ = □



## விடை சொல்லமுடியுமா?

- அகிலாவிடம் 12 முத்துகள் இருந்தன. மேலும் 5 முத்துகள் கிடைத்தன. இப்பொழுது அகிலாவின் கையில் உள்ள முத்துகள் எத்தனை?
- அருணின் கையில் 15 மிட்டாய்கள் உள்ளன. அதில் 3 மிட்டாய்களை சுரேஷிற்குக் கொடுத்தான். இப்பொழுது அருணின் கையில் உள்ள மிட்டாய்கள் எத்தனை?

## எண் விளையாட்டு

அனிதா நான்கு எண்களை அட்டையில் எழுதினாள்.

| 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|

விமல் அந்த அட்டைகளை இவ்வாறு அடுக்கினான்.

| | |
|---|---|
| 8 | 9 |
| 10 | 11 |

எதிர் மூலைகளிலுள்ள எண்களைக் கூட்டிப் பார்ப்போம்.

10 + 9 = ☐

11 + 8 = ☐

இதைப் போன்று 4, 8, 12, 16 போன்ற எண்களைக் கட்டங்களில் எழுதுங்கள்.

| | |
|---|---|
| | |
| | |

எதிர் மூலைகளிலுள்ள எண்களைக் கூட்டிப் பாருங்கள்.

☐ + ☐ = ☐

☐ + ☐ = ☐

இதில் விடுபட்ட எண் எது ?

| | |
|---|---|
| 7 | 3 |
| 10 | |

எவ்வாறு கிடைத்தது?





# ஒன்று இரண்டு மூன்று

தனிமையில் நானிருந்தால் ஒன்று.
அம்மாவுடன் சேர்ந்திருந்தால் இரண்டு.
அப்பாவும் உடனிருந்தால் மூன்று.
அக்காவும் சேர்ந்து கொண்டால் நான்கு.
அண்ணனும் இணைந்து கொண்டால் ஐந்து.
பொம்மையையும் எடுத்துக் கொண்டேன் ஆறு.
குட்டி நாயும் ஒட்டிக் கொண்டது ஏழு.
சுட்டிப் பூனை சேர்ந்து கொண்டது எட்டு.
குட்டியாடு ஓடி வந்தால் ஒன்பது.
தாயும் கூடச் சேர்ந்து கொண்டால் பத்து.
















## நிரப்புங்கள்








## கிரீடம் செய்வோம்




காலியான கட்டங்களில் சரியான எண்களை எழுதுவோமா?

# 8 வடிவங்களின் அழகு



கோகிலா நாய்க்குட்டியைத் தேடினாள். தேடித் தேடி ஆற்றங்கரைக்கு வந் தாள். ஆற்றங்கரை அழகை ரசித்த படியே நடந்தாள். உருண்டையான கற்கள், பரந்த இலைகள், வட்ட வடிவில் சூரியன், பல நிறங்கள், பல வடிவங்கள் . . .

படத்தில் என்னென்ன உள்ளன?

- - - - - - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - - - - - -


- - - - - - - - - - - - - - - - - - - -

## பலகாரம் பல வடிவம்

அனிதா பலகாரங்களை வகைப்படுத்தினாள்.


ஒரே வடிவிலுள்ளவற்றை அதே வடிவிலுள்ள பாத்திரத்தில் வைக்க வேண்டும்.

கோடிட்டு இணையுங்கள்.





## படத்திற்கு நிறம் கொடுப்போம்

அனிதாவும் விமலும் வரைந்த படங்களைப் பாருங்கள்.



இந்த வடிவங்களுக்கு இதே நிறம் கொடுத்து முழுமைப்படுத்துங்கள்..







## நிறம் கொடுப்போம்


அனிதாவும் விமலும் வரைந்த படங்களுக்கு நிறம் கொடுங்கள்.

அனிதா வரைந்தது | விமல் வரைந்தது
















யார் வரைந்த படம் உங்களுக்குக் கூடுதல் பிடித்தது?

## மீதியை வரைவோம்

படத்தில் வரையாமல் இருக்கும் பகுதியை வரையுங்கள்.








படங்களுக்குப் பொருத்தமான நிறம் கொடுங்கள்.


## உங்களால் முடியும்!

அனிதா படம் வரைகிறாள். அனிதா வரைவதைப் போல் நீங்களும் வரைந்து பாருங்கள்.










ஐயோ...
பூனை!

# 9 எவ்வளவு நீளம்?


சுண்டெலியும் மோட்டு எலியும் நண்பர்கள். அவை இரை தேடி நடந்தன.





சுண்டெலிக்கும் மோட்டு எலிக்கும் சண்டை வந்தது.




ஏன் சண்டை போடுகிறீர்கள்?
என்னுடைய காரட் தானே நீளமானது?
கொடுங்கள் நான் பார்க்கிறேன்!


இது தானே
நீளமானது!



நான் இரண்டையும்
ஒரே நீளமாக்கித்
தருகிறேன்.
ஆஹா! என்ன
ருசி !


? ?

## சிறியது எது?

அகிலாவும் மோகனும் பள்ளிக்குத் தேவையான பொருட்களை எடுத்து வைத்தார்கள்.


நீளம் குறைந்த பொருட்களைச் சுற்றி வட்டம் வரையுங்கள்.



## எதை எடுக்கவேண்டும்?

குப்பியிலுள்ள சீனியை எடுப்பதற்கு எந்தக் கரண்டி பொருத்தமானது ? ✓ போடுங்கள்





ஏன்?

## மிகவும் பெரியது

உங்களது வகுப்பிலுள்ள குழந்தைகளின் பென்சில்களில் நீளம் கூடிய பென்சில் யாருடையது? கண்டுபிடியுங்கள்.




## வரிசைப்படுத்துவோம்

படத்திலுள்ள ஒவ்வொரு குழுவிலும் உள்ளவற்றைப் பரிசோதித்து மிகச் சிறியதை 1, அதை விடப் பெரியதை 2, மிகப் பெரியதை 3 என வரிசைப்படுத்துங்கள்.



நீளம் குறைந்த கயிறு யாருடையது ? ✓ போடுங்கள்



☐ ☐

## கண்டுபிடிப்போம்


- உங்கள் கை விரல்களுள் நீளம் கூடியது எது?
- உங்கள் நண்பர்களுள் கூடுதல் தூரம் தாண்டுவது யார்?
- வகுப்பறையிலுள்ள மேசை, கரும்பலகை ஆகியவற்றுள் நீளம் கூடியது எது?



# விளையாட்டு வண்டி தயாரிப்போம்.

தென்னைமரத்திலுள்ள 5 குறும்பை வேண்டும்.
ஒரே நீளத்திலுள்ள 8 ஈர்க்குச்சிகளும் ஒரு சரடும் வேண்டும்.





படத்தில் உள்ளது போல் குறும்பைகளில் ஈர்க்குச்சிகளைக் குத்தி வண்டி உருவாக்குங்கள்.





# 10 ரூபாயும் பைசாவும்


நாளை நாம் ஒரு சுற்றுலா செல்லப் போகிறோம்.
சுற்றுலா செல்ல நிறைய பணம் வேண்டுமே!
நாங்களும் வருகிறோம்.
மாலை, வளையல் வாங்கத் தேவையான பைசா என்னிடம் உள்ளது.
சேமிப்புப் பெட்டியைத் திறக்க வேண்டும்.
ஒரு பலூன் வாங்க 3 ரூபாய். இரண்டு பலூன் வாங்குவதற்கோ?

## சேமிப்புப் பெட்டியைத் திறந்தபொழுது





## நாணயங்களை வகைப்படுத்தலாம்







எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?




இந்த நாணயம் எது?




உங்களுக்குத் தெரிந்த ரூபாய் நோட்டுகள் எவை?





## சொல்ல முடியுமா?

எல்லா ரூபாய் நோட்டுகளிலும் உள்ள படம் யாருடையது? 10 ரூபாய் நோட்டில் எத்தனை இடங்களில் 10 என்று எழுதப்பட்டுள்ளது?

எல்லா ரூபாய் நோட்டுகளும் ஒரே அளவில் உள்ளனவா? நாணயங்களையும் ரூபாய் நோட்டுகளையும் பாருங்கள். அவற்றிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுங்கள்.

## கடை வீதியில் . . .




ஒரு பலூனின் விலை .................... ரூபாய்.

ஒரு பீப்பியின் விலை.................... ரூபாய்.


கௌதம் ஒரு பலூனும் ஒரு பீப்பியும் வாங்க எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? ..........................

எந்தெந்த நாணயங்களைக் கொடுக்க வேண்டும்?

படத்தில் ✓ போடுங்கள்.



## மொத்தம் எவ்வளவு?




ஒரு மாலையின் விலை............ ரூபாய்.

ஒரு வளையலின் விலை ............ ரூபாய்.

மொத்த விலை = ............ + ............ = ............ ரூபாய்.

## கூடுதல் யாருக்கு?









சௌமியாவின் கையில் உள்ளது ☐ ரூபாய்.

கௌதமின் கையில் உள்ளது ☐ ரூபாய்.

எது சரி? ✓ போடவும்.

கௌதமிற்குக் கூடுதல். ☐

சௌமியாவிற்குக் கூடுதல். ☐

இருவருக்கும் சமம். ☐

## மொத்தம் எவ்வளவு?

10 + 10 + 10 = ☐

5 + 5 + 5 = ☐

2 + 2 + 1 = ☐


# 11 நேரமாச்சு

கோழி கூவியது.
பொழுது விடிந்தது.
அமுதன் தூங்கிக்கொண்டிருந்தான்.



## நேரம்

எது சரி ? ✓ போடுங்கள்.




நீங்கள் உறங்குவது எப்போது?

இரவு ☐ பகல் ☐

நீங்கள் எழுவது எப்போது?

காலை ☐ மதியம் ☐ மாலை ☐

### நான் யார்?

கிழக்கே இருப்பேன்
காலையில்! உன்
தலைக்கு மேலே
இருப்பேன் மதியத்தில்!
கடலில் மறைவேன்
மாலையில்! நான் யார்
தெரியுமா?



நீங்கள் பள்ளிக்குச் செல்வது

காலை ☐ மாலை ☐

எதற்கு அதிக நேரம் செலவிடுவது? எதற்கு அதிக நேரமாகும்?
✓ போடுங்கள்.














வரிசைப்படுத்துங்கள்

முதலில்,    பிறகு,  கடைசியில்





மஞ்சு செய்யும் செயல்களை எண்கள் எழுதி வரிசைப்படுத்துங்கள்.













## எந்த நேரம்?

| | |
|---|---|
| பள்ளி செல்வது | காலை |
| சூரியன் மறைவது | |
| பறவைகள் கூட்டிற்குத் திரும்புவது | |
| செய்தித்தாள் வீட்டில் கிடைப்பது | |
| பள்ளி விடுவது | |
| மதிய உணவு உண்பது | |


## கண்டுபிடிப்போம்

ஒரு வாரத்திற்கு
எத்தனை நாட்கள்?
முதல் நாள் எது?
கடைசி நாள் எது?

ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி சனி
வாரத்தின் நாட்கள் ஏழாகும்.
வரிசையாகச் சொல்லிப் பார்.

வாரத்திலுள்ள ஏழு நாட்களையும்
வரிசையாக எழுதுங்கள்.

## கௌதமின் ஒரு வாரம்



ஞாயிறு


திங்கள்



செவ்வாய்


புதன்


வியாழன்


வெள்ளி


சனி

கடந்த வாரம் ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்த ஒரு முக்கியச் செயலை எழுதுங்கள்.

ஞாயிறு ------------------------------------

திங்கள் ------------------------------------

செவ்வாய் ------------------------------------

புதன் ------------------------------------

வியாழன் ------------------------------------

வெள்ளி ------------------------------------

சனி ------------------------------------



பள்ளிக்கு வார விடுமுறை நாள் எது?

திங்கள் கிழமைக்கும் புதன் கிழமைக்கும் இடையே வரும் கிழமை எது?

## நிரப்புங்கள்

| | | |
|---|---|---|
| இன்று | திங்கள் | மஞ்சு பள்ளிக்குச் செல்ல வேண்டும். |
| நாளை | | நூலகத்திற்குச் செல்ல வேண்டும். |
| மறுநாள் | | பள்ளியில் காலைக் கூட்டம் நடைபெறும். |
| நேற்று | | பள்ளி விடுமுறையாக இருந்தது. |

## நாட்காட்டி






ஒரு நாட்காட்டியிலுள்ள மாதங்களை வரிசைப்படி எழுதுங்கள்.

## யார் யார்.. எந்தெந்த?

ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு மாதத்தின் பெயர் எழுதுங்கள். உங்கள் நண்பர்களின் பிறந்த மாதம் கண்டறிந்து அந்தப் பூவில் அவர்களின் பெயரை எழுதுங்கள்.






# கிழமைகள்

திங்கள் கிழமை காலையில்
மாம்பழம் ஒன்று கிடைத்தது.

செவ்வாய்க் கிழமை காலையில்
மாம்பழங்கள் இரண்டு கிடைத்தன.

புதன் கிழமை காலையில்
மாம்பழங்கள் மூன்று கிடைத்தன.

வியாழக் கிழமை காலையில்
மாம்பழங்கள் நான்கு கிடைத்தன.




வெள்ளிக் கிழமை காலையில்
மாம்பழங்கள் ஐந்து கிடைத்தன.

சனிக் கிழமை காலையில்
மாம்பழங்கள் ஆறு கிடைத்தன.

ஞாயிற்றுக் கிழமை காலையில்
மாம்பழங்கள் ஏழு கிடைத்தன.

எங்களுக்குக் கிடைத்த மாம்பழங்கள்
எத்தனை என்று நீ சொல்வாயா?

# எந்த மாதத்தில்-கண்டுபிடிப்போம்



பள்ளி திறந்தது





சுதந்திர தினம்





காந்தி ஜெயந்தி





குழந்தைகள் தினம்





ஆசிரியர்கள் தினம்





குடியரசு தினம்

